2017 ஜூன் 29]

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

கால்நடை மருத்துவமனை

***4536—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள், "ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?" எனக் கேள்வி கேட்டிருக்கிறார்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், இராமநாயக்கன்பாளையம் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5000–க்கும் அதிகமாக உள்ளதால், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு, கால்நடை மருத்துவமனை நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை மருந்தகம் இருந்தால் மட்டுமே, அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். எனவே, வரும் நிதியாண்டில் அரசின் கொள்கை முடிவின்படி, முன்னுரிமை அடிப்படையில் பட்டியலில்

சேர்த்து, இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.*

திரு. ஆர்.எம். சின்னதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழினமே பெருமைகொள்ளும் பேரறிவுப் பெருந்தகை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மக்கள் நலம் காப்பதில் துணிவோடும், திறமையோடும், இமயம் முதல் குமரி வரை நீங்காத புகழோடு விளங்கிய எங்கள் தேசியத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசுக்கு, நித்தம் நித்தம் தொல்லை கொடுத்துவந்தவர்களை நிலைகுலையச் செய்து, மனக்கணக்கு போட்டவர்களை மண்ணைக் கவ்வச் செய்த எங்களின் மாங்கனி மாவட்டத்தின் மாவீரர், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனக்குப் பேரவையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் சுமார் 15 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட இரண்டு வருவாய் கிராமங்கள் உள்ளன. இந்த கிராமம் விவசாயம் நிறைந்த பகுதியாகும். இந்த கிராமத்தில் கால்நடைகள் அதிக அளவில் உள்ளன. 2012 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி பசுவினம் 3,233; எருமையினம் 280; வெள்ளாடு 3,702; செம்மறியாடு 315; கோழிகள் 7,842; மொத்தம் 15,372 கால்நடைகள் உள்ளன. மேலும் இந்த இரண்டு வருவாய் கிராமங்களிலும் சேர்த்து, நாள் ஒன்றுக்குச் சுமார் 5 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டால், சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கால்நடை மருந்தகத்திற்குச்

செல்லவேண்டியுள்ளது. எனவே, கால்நடைகளின் உயிர் சேதத்தைத் தவிர்க்க, இராமநாயக்கன்பாளையத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டியது அவசியமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராமநாயக்கன்பாளையத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்று தெரிவித்து, உறுதியளித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி கூறுகிறேன். மேலும், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், உமையாள்புரம் ஊராட்சியில், கால்நடை துணை மருந்தகத்தைத் தரம் உயர்த்தித் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உமையாள்புரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கக் கேட்டிருக்கிறார். அங்கு கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் கால்நடை மருத்துவமனைகளுக்கு இடையே உள்ள தூரம் (distance norms) எல்லாம் சரியாக இருந்தால் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அங்கு மருந்தகம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், உமையாள்புரம் ஊராட்சியில் கால்நடை துணை மருந்தகம் செயல்பட்டுவருகிறது. இந்தத் துணை மருந்தகத்தில் தினமும் சுமார் 50 முதல் 100 வரை கால்நடைகளுக்கு முதலுதவி சிகிச்சை மற்றும் கருவுருதல் ஊசி போடப்பட்டு வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முதல்வர் புரட்சித்

தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், பள்ளி மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் இலவச சத்துணவுத் திட்டம் கொண்டுவந்தார். அதன் முன்னோடியாகத்தான் நம்மைவிட்டு மறைந்தும் மறையாமல் இருக்கின்ற தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், தமிழக மக்களின் பசியைப் போக்க, விலையில்லாமல் இலவச அரிசி வழங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கால்நடைகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் வழங்கிவருகிறது. இந்தியாவில் வேறு எங்கும் இந்தத் திட்டம் இல்லை. தமிழக விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கியதோடு, கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்த அரசு, அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு. பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், உமையாள்புரம் கிராமத்தில் கால்நடை துணை மருந்தகத்தைத் தரம் உயர்த்தி தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக பணிவுடன் கேட்டுக்கொண்டு, அமருகிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]